Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 176 / 2019

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுதாகர் | Calling: | விவசாயம் |
| Father's / Husband's Name: | உத்திரேசன் | Religion: | |
| Village: | சம்மந்திகுப்பம் | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 21.07.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

கு.மு.சா.1 மனுவின்பேரில் அழைத்து மீண்டும் அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை

நான் எந்த தேதியில் முதலில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் 2018ம் வருடம் தாக்கல் செய்தேன். எதிரி எனக்கு செல்போனில் குறுஞ்செய்தி அனுப்பியதாக நான் சொன்னது எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை என்றால் 29.03.2019 முதல் 04.01.2021 வரை. வாட்சப் குறுஞ்செய்தி விவரங்களை நான் நீதிமன்றத்தில் ஜெராக்ஸ்ஆக தாக்கல்செய்துள்ளேன் என்றால் நகல் எடுத்து சிடி பைலாகவும் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்த நாள் 27.02.2019 என்றால் அது எனக்கு நியாபகம் இல்லை. எதிரி என்னிடம் வாட்சப் குறுஞ்செய்திகள் அனுப்பியது 29.03.2019 முதல் 25.12.2020 வரை என்றால் 29.03.2019 முதல் 04.01.2021 வரை. நான் எனது முதன்மை சாட்சியத்தை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் அது எனக்கு நினைவில்லை, நீதிமன்றத்தில் உள்ளது. நான் எதிரியின் மீது 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதற்காக நான் தாக்கல் செய்த முதன்மை சாட்சியத்தில்

மேற்கூறிய வாட்சப் குறுஞ்செய்திகள் அடங்கிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் அப்போது குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான், எனது குறுக்கு விசாரணையின்போது சொன்னேன். எனது குறுக்கு விசாரணை முடிக்கப்பட்ட தேதி தெரியுமா என்றால் எனக்கு நினைவில்லை.

எனது குறுக்கு விசாரணை முடிக்கப்பட்ட தேதியில் கூட நான் வாட்சப் குறுச்செய்தி பற்றி எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு எந்த ஒரு வாட்சப் குறுஞ்செய்தியும் அனுப்பவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக நானே தயாரித்த ஆவணம் என்றாலும் சரியல்ல, அவர்தான் அனுப்பினார். வாட்சப் ஓபன் செய்து முதன்முதலில் கிரியேட் பண்ணும்போது யார் பெயரை வேண்டுமானாலும் போட்டு கிரியேட் செய்யலாம் என்றால் எனக்கு தெரியாது, நான் கடவுச்சொல்லை பதிவு செய்து எனது பெயரில் வைத்துள்ளேன். நான் என் குடும்பத்தில் உள்ள நபரின் மூலம் எதிரியின் பெயர் போட்டு இந்த வாட்சப் மெஜேஜை அனுப்பிகொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எவ்வித வாட்சப் மெஜேஜையும் பரிமாற்றம் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு செய்திருந்தால் நான் முதன்மை சாட்சியத்திலேயே ஆவணமாக குறியீடு செய்து தாக்கல் செய்திருப்பேன் என்றால் எனது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன்.

வாட்ஸ் ஆப் யார் கண்ரோலில் உள்ளது என்றால் எலான்மஸ்க் Meta கண்ரோலில் உள்ளது. நான் இந்த நிறுவனத்திடம் அனுமதி பெறாமல் என் குடும்பத்திற்குள்ளேயே திருட்டு தனமாக ஜெராக்ஸ் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் Metaவில் நான் அனுமதி வாங்கவில்லை, எனக்கு வந்த குறுஞ்செய்தியை முறையாக பிரிண்ட் அவுட் எடுத்து சிடி பைலாக தாக்கல் செய்துள்ளேன். குறுஞ்செய்தி வந்த போனை நீதிமன்றத்தில் Exhibit ஆக குறியீடு செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் சிடியாகவும்,ஜெராக்ஸ் ஆகவும் தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த போனை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாக கூறியுள்ளேன் என்றாலும், அதன்படி ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வாட்சப் குறுஞ்செய்திக்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, எதிரிதான் எனக்கு அந்த குறுஞ்செய்தியை அனுப்பினார். 27.02.2019ம் தேதி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அவ்வாறு ஒரு வாட்சப் குறுஞ்செய்தி இருந்திருந்தால் வழக்கு தாக்கல் செய்த அன்றே Exhibit ஆக குறியீடு செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு ஒரு குறுஞ்செய்தி இல்லாததால் தான் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன்

என்றாலும், எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல, 29.03.2019ம் தேதி தான் குறுஞ்செய்தி அனுப்பினார்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சுதாகர்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K